# உடல் நலம்;




## 1 குடும்ப மருத்துவர்/ மருந்தகம்.

அவசரமான, குறைந்த தீவிரமான உடல்நலத்தேவைக்கு.

- குடும்ப மருத்துவரை நேரிலோ அல்லது தொலைபேசியிலோ தொடர்பு கொள்ளவும்.
- பொதுவான சிறிய நோய்களுக்கான ஆலோசனைகளுக்கு உங்கள் சமூக மருந்தாளரை நாடவும்.
- நீங்கள் கர்ப்பமானவுடன் மருத்துவ தாதியிடம் உங்களை பதிவு செய்யவும்.

## 2 விபத்து மற்றும் சிகிச்சை நிலையம் ( அவசர சிகிச்சை நிலையம்)

அவசரமான,குறைந்த தீவிரமான உடல்நலத்தேவைக்கு உங்கள் குடும்ப மருத்துவரை பார்க்க முடியாத பட்சத்திலே அல்லது வழமையான வேலை நேரத்திற்கு அப்பாற்பட்ட நேரத்தில்

- உங்கள் குடும்ப வைத்தியரை அழைத்து, அருகில் உள்ள விபத்து மற்றும் சிகிச்சை நிலையத்தை (அவசர சிகிச்சை நிலையம்) அறிந்து கொள்ளவும்.

## 3 மருத்துவமனை அவசர சிகிச்சை பிரிவு.

தீவிரமாக உடல்நலம் பாதிக்கப்பட்டு அவசர சிகிச்சை தேவைப்படின்,

- மருத்துவமனை அவசர சிகிச்சை பிரிவுக்கு அல்லது 111 ஐ அழைக்கவும்.

பயிற்றுவிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட தாதியின் ஆலோசனை தேவைப்படின், இலக்கம் **0800 611 116** ஐ 24/7 இலவசமாக அழைக்கலாம்.

உங்கள் அருகில் உள்ள குடும்ப வைத்தியரை, மருந்தகம், அல்லது விபத்து மற்றும் மருத்துவ சிகிச்சை நிலையம் ( அவசர சிகிச்சை மருத்துவ மனை) அல்லது மருத்துவச்சியை கண்டு பிடிக்க, **www.healthpoint.co.nz** என்ற தளத்திற்குச் செல்லவும்.

Free health advice when you need it Healthline 0800 611 116 www.healthline.govt.nz

**www.tewhatuora.govt.nz/public-health-service-eligibility-guide**

Te Whatu Ora Health New Zealand

**info.health.nz/yourlocaldoctor**

This resource is available from healthed.govt.nz or your local Authorised Provider

HE3527-May 2025